பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 26 ஞாயிற்றுக்கிழமை (10-01-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 45

## பூநகரிப் பாதை விவகாரம்:

# புலிகளின் நிபந்தனையை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தது

## ராணுவ முகாமை அகற்ற முடியாது பிரதமர் விஜேதுங்க அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 10

குடாநாட்டிற்கான போக்குவரத்தைச் சீர்செய்யும் ஓர் ஏற்பாடாக பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்திருக்கிறது.

பூநகரிப் பாதையைத் திறப்பதானால் அப்பகுதியிலிருக்கும் இராணுவ முகாமை அகற்றவேண்டும் என புலிகள் நிபந்தனை விதித்திருப்பது தெரிந்ததே.

ஆனால் முகாமை அகற்ற முடியாது என பிரதமரும், நிதியமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க அறிவித்திருக்கிறார்.

குடாநாட்டுக்கான உணவுப் பொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு வசதியாக கீரிமலை — சேந்தாங்குளம் பாதையூடாக வாகன அணி சென்றுவருவதற்கு ஏற்கனவே இணக்கம் காணப்பட்டிருந்தது தெரிந்ததே.

இப்பாதையைத் தாக்குதலற்ற பிரதேசமாகக் கருதுவது என செஞ்சிலுவைச் சங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'புக்கார' விமானத்தில் படையினர் பயிற்சி!

கொழும்பு, ஜன. 10

புதிதாக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் 'புக்கார' தரைத் தாக்குதல் விமானத்தில் படையினர் கடந்த சில நாட்களாகப் பயிற்சி பெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பிரான்ஸ் தயாரிப்பான 'புக்கார' ரக விமானங்களில் நான்கு ஆர்ஜென்ரீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பது தெரிந்ததே.

அவற்றில் ஒன்று பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு கடந்த வாரம் கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. கொழும்பில் அவற்றை பொருத்தி மீண்டும் விமானத்தைத் தயார் செய்ததை அடுத்து, அதற்றில் ஸ்ரீலங்காப்படையினர் தமது பயிற்சியை ஆரம்பித்தனர்.

இந்த விமானத்தில் ஒரே நேரத்தில் இரு விமானிகள் பயணம் செய்யவும், சுமார் ஆயிரத்து ஐந்நூறு கிலோ எடையுள்ள குண்டுகள், றொக்கட்டுகள், ஏவுகணைகள் ஆகியவற்றை எடுத்துச் செல்லவும் வசதிகள் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

### ப. நோ. கூ. சங்கங்களில்

## அரிசி, மா, சீனிக்கு நியாய விலை நிர்ணயம்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்க அதிபர் ஊடாகப் பணம் செலுத்திக் கொள்வனவு செய்யும் பொருள்களுக்கு நியாய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நியாய விலை நிர்ணயிக்கப்பட்ட நான்கு அத்தியாவசியப் பொருள்களும் அவற்றின் விலை விவரமும் வருமாறு:-

கோறா அரிசி (கிலோ,— 22ரூபா 50 சதம்

வெள்ளை அரிசி (கிலோ)— 21ரூபா 50 சதம்

சீனி (கிலோ) — 31 ரூபா

கோதுமை மா (கிலோ) — 17ரூபா (அ)

### ஜி. சி. ஈ. (சா.)தரப பரீட்சை

## விடைத்தாள்கள் ஒரு வாரம் கப்பலில் அலைக்கழிவு!

### அதிகாரியும் சேர்ந்து உலைகிறார்

யாழ்ப்பாணம் ஜன. 10

''குமண'' கப்பலில் ஏற்றப்பட்ட ஜி. சி. ஈ. [சாதாரண தர] பரீட்சை விடைத்தாள்கள் கப்பலில் ஐந்து நாள் சுற்றிவிட்டு, கப்பலை விட்டு இறக்கப்படாமல் மீண்டும் பருத்தித்துறை வந்து சேர்ந்தன.

விடைத்தாள்களுடன் அவற்றுக்குப் பொறுப்பாகச் சென்ற — யாழ். கல்வித் திணைக்கள — அதிகாரியும் விடைத்தாள்களுடன் கப்பலில் ''தவம்'' கிடப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த திங்களன்று விடைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ராவின் டாக்கா விஜயம் ரத்து!

## ஏழாவது சார்க் மாநாடு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 10

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் 13 ஆம் திகதி நடக்கவிருந்த ஏழாவது சார்க் உச்சிமாநாடு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்திய பிரதம மந்திரி பி. வி. நரசிம்மராவ் பாதுகாப்புக் காரணங்களுக்காக பங்களாதேஷுக்கான பயணத்தை ரத்துச் செய்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவும் தமது டாக்கா விஜயத்தை ஒத்திவைத்திருப்பதாக ஸ்ரீலங்கா ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

எனினும் பீஹார் புத்தகயாவில் பொன்வேலியையும் விதானத்தையும் திரைநீக்கம் செய்யும் வைபவத்தில் பிரேமதாசா கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டது.

அயோத்தி பிரச்சினையை அடுத்து பங்களாதேஷில் நிலவி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ராவின் விசேட பிரதிநிதி இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஜன. 10

டாக்காவில் நடக்கவிருந்த சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் விசேட தூதுவர் ஒருவர் இன்று கொழும்பு வருகிறார்.

வெளிவிவகார இணை அமைச்சர் எட்வார்டோ பெலரோ, ஜனாதிபதி பிரேமதாசவுக்கு இந்தியப் பிரதமரின் விசேட செய்தி ஒன்றையும் எடுத்து வருகிறார்.

டாக்கா மாநாட்டில் ராவ் கலந்து கொள்ள முடியாத

(2ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி

யாழ்ப்பாணம், ஜன. 10

இதுவரை மீட்பு நிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர் — சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் — தமது மீட்பு நிதிக்கான கடனை இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## பம்பாய் கலவரம் மோசமான கட்டத்தில்!

பம்பாய், ஜன 10

அயோத்தி பிரச்சினையைத் தொடர்ந்து பம்பாயில் மீண்டும் ஆரம்பமாகியுள்ள கலவரம் மிக மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்றுவரும் இந்து - முஸ்லிம் கலவரங்களில் 70 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இரு மதங்களையும் சேர்ந்த வெறிக்கும்பல்கள் வீடுகளை எரிப்பதிலும், ஆட்களை உயிருடன் வீடுகளில் வைத்து எரியூட்டிக் கொல்வதிலும் ஈடுபட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 'சார்க்' இப்போதைக்கு நடைபெறாது

டாக்கா, ஜன. 10

காலவரையறை குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் ''சார்க்'' மாநாடு, இப்போதைக்கு நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரியாஸ் ரஹ்மான் நேற்று டாக்காவில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

### முச்சந்தி முரளி



உது ... சார்க் மாநாடோ? சறுக்கிற மாநாடோ...?

### பொருளாதாரக் கொள்கை குறித்து மட்டும்

## பிரேமா - சிறிமா நேரடியாக பொது மேடையில் விவாதம்

### ஜனாதிபதியின் சவாலை ஏற்றார்

கொழும்பு, ஜன. 10

அரசின் பொருளாதாரக் கொள்கை குறித்து பொது மேடை ஒன்றில் நேருக்கு நேர் பகிரங்கவிவாதம் நடத்துவதற்கு ஜனாதிபதிபிரேமதாஸா விடுத்த சவாலை எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஏற்றிருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸா கடிதம் ஒன்றை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு தென்பகுதியில் -- குறிப்பாக எதிர்க்கட்சிகளிடமிருந்து — பலமான கண்டனம் எழுந்திருக்கும் இவ்வேளையில் ஜனாதிபதி பிரேமதாஸா இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

எனினும் —

நாட்டின் தற்போதைய முக்கிய பிரச்சினையாகக் கருதப்படும் — வடக்கு, கிழக்கு யுத்தம் குறித்து இந்தப் பொது மேடை விவாதத்தில் வாதிடப்படமாட்டாது என்று அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் முக்கிய பிரச்சினையாக இருக்கும் இனப் பிரச்சினை குறித்து விவாதிக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்ட பேரணிக்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி

### லட்சக்கணக்கில் மக்கள் திரளுவர்

அரசாங்கத்தின் பல்வேறு அடக்குமுறைகளையும், பொருளாதாரத் தடையையும் கண்டித்து நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டப் பேரணியில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதாக அமைப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாபெரும் பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக அதே வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

பேரணியில் கலந்து கொள்வோரின் வசதி கருதி விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்படவுள்ளன. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இருந்து வரும் மக்களுக்கு அவ்வப் பகுதியில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வாகன வசதிகளைச் செய்து கொடுக்கும். மினிபஸ் சங்கமும் இலவச சேவைகளை நடத்த உள்ளது.

சொந்த வாகனங்கள், மிதிவண்டிகள், முச்சக்கர வண்டிகள், மாட்டு வண்டிகள் வைத்திருப்போரை அவற்றுடன் வருமாறு தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## டில்லியில் விமான விபத்து; அமைச்சர் உடன் ராஜினாமா

புதுடில்லி, ஜன. 10

புதுடில்லியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விமான விபத்து ஒன்றை அடுத்து இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியா தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஹைதராபாத்தில் இருந்து புறப்பட்ட விமானம் புதுடில்லியில் இந்திராகாந்தி விமான நிலையத்தில் நேற்று அதிகாலை தரையிறங்க முற்பட்டபோது பனி மூட்டம் கடுமையாக இருந்ததால் விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் விமானப் பயணிகள் 152 பேரும் விமானிகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AIKAYES அறிவித்தல்

கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட
உற்றார், உறவினர், நண்பர்களுக்கான
வடபகுதி
## தனியார் உணவு விநியோகம்

எமது இறுதிக்கட்ட விநியோகமாக கடந்த 15, 17, 9, 21, 23, 24, 25-12-92 ஆகிய திகதிகளிலும், 2, 3, 4-1-93 ஆகிய திகதிகளிலும் விநியோகத்திற்காக உங்களை சந்தித்திருந்தும், இன்னும் சிலர் தங்கள் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

இவர்கள் தங்கள் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் முகமாக, அறிவிக்கப்படும் திகதியை தயவுசெய்து விரைவில் இதே பத்திரிகையில் பார்த்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

AIKAYES JAFFNA
முத்துகிருஷ்ணர் வீதி, (நாகம்ஸ் சினிமா முன்)
சுன்னாகம்.

(சி-2536)


## ராவின் விசேட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிலைமை குறித்து, இரு பெலரோ பிரேமதாசாவிடம் விளக்கிக் கூறுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி பிரேமதாசாவுடன், இந்தியப் பிரதிநிதி சார்க் மாநாட்டை நடத்துவதற்கான புதிய திகதி குறித்து கலந்துரையாடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், இந்தியப் பிரதமர் நரசிம்மராவ தாம் சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாத நிலை குறித்து நேற்றே ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அறிவித்து விட்டதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது. (ஒ)


O/L & Yr.10

விஞ்ஞானம் — கிறிஸ்ரி
கணிதம் — தயாளன்
தமிழ் — செல்வி ஜெஸ்மின்
வர்த்தகம் — ஸ்ரீ
சமூகக்கல்வி — கோகுலன்
ஆங்கிலம் — அன்ரன்

SAMROCK
யாழ். சுண்டுக்குளி
]24005]


## பிரேமா-...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காமல் வேறு விடயம் குறித்து — பொருளாதாரக் கொள்கை குறித்து — நாட்டின் முக்கிய இரு தலைவர்களான, ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவியும் பொது மேடை விவாதம் நடத்துவது கேலிக் கூத்தாகும் என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

பிரேமதாஸா நேற்று சிறிமாவுக்கு அனுப்பிய கடிதத்தில் —

இத்தகைய விவாதங்கள் மூலம் பொதுமக்கள் நன்மையடைவர் என்று குறிப்பிட்டுள்ளார்.


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
## வேண்டுகோள்

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையைக் கண்டித்தும் மற்றும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்தும் யாழ். மாவட்ட வெகுசன அமைப்பினால் நாளை காலை 10-00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து யாழ். செயலகம் வரை நடத்தப்படும் ஊர்வலத்தில் சகல அதிபர்களும், ஆசிரியர்களும் பங்கு பற்றி, கல்விச் சமூகத்தின் பலத்த ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:- ஆசிரியர்கள் அனைவரையும் காலை 9-00 மணிக்கு நல்லூரில் உள்ள சங்கப் பணிமனைக்கு முன் கூடுமாறும், இது பற்றி ஆலோசிப்பதற்காக இன்று பி.ப. 3-00 மணிக்கு தாய்ச் சங்க, மாவட்ட கிளை நிர்வாகிகள் சங்கப் பணிமனைக்கு வருமாறும் அழைக்கப்படுகின்றனர்.

த. மகாசிவம்,
பொதுச் செயலாளர்,
இ. த. ஆ. சங்கம்
(24004)



# A/L புதிய பிரிவுகள்

செவ்வாய், வியாழன்

| | | |
|---|---|---|
| PHYSICS | — | திரு. சுந்தரலிங்கம் |
| CHEMISTRY | — | திரு. குமரன் |
| ZOOLOGY | — | திரு. அல்போன்ஸ் |
| PURE MATHS | | |
| APPLIEDMATHS | — | திரு. கண்ணன் |

★ முதலிலிருந்து முழுப்பாடத்திட்டமும் மீட்டல்
★ நேர அட்டவணையை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளவும்.

ஆரம்பம்: 12-01-93

BOND INSTITUTES
யாழ்ப்பாணம்.
[கி/4139]



நீராவியடி
## மகளிர் பணியக நிதி உதவிக்காக

செல்வி குஞ்சலா நாகராஜ ஐயரின்
# "இசைமாலை"

இலங்கைவேந்தன் குழுவினரின்
## "கதகளி பரதநாட்டியம்"

புலவர் முத்துராசரெத்தினத்தின்
# ★ இலங்கை வேந்தன் ★
(இசை, நடன நாடகம்)

இடம்: யாழ். இந்து குமாரசாமி மண்டபம்
காலம்: 10-01-93 இன்று பி. ப. 2.30 மணி


இலங்கை வேந்தனின் நடனத் தோற்றம்

தலைவர்: திருமதி ந. கோமளாதேவி
காரியதரிசி: செல்வி. ப. பகீரதி

அன்பளிப்பு:
## நியூ சந்திரா தொழிலகம்
தரமான கச்சான், இனிப்பு வகைகளுக்கு
209/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(24009



## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்துவின் ஆசிரியராகவும் தனியார் கல்வி நிறுவனங்களின் "கணக்கியல்" ஆசிரியராகவும் பணிபுரிந்து ஆயிரக்கணக்கான மாணவருக்கு அறிவூட்டி வாழ்வை உத

# பேராசான் யோகராஜா

அவர்களுக்கு எமது கண்ணீர்ப்பூக்களை
காணிக்கையாகச் செலுத்துகின்றோம்
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

வர்த்தக பிரிவு
94, A/L மாணவிகள்.
சுன்னாகம்.
(5481)



வெளிவந்து விட்டது — தை - பங்குனி

# மாற்றம்

மக்கள் சஞ்சிகை
(24012)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

01. உடலமைப்பியல் பேராசிரியர்
02. நோயியல் பேராசிரியர்
03. மருத்துவப் பேராசிரியர்
04. மனநோயியல் பேராசிரியர்
05 குழந்தை மருத்துவ பேராசிரியர்
06. அங்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
07. கழலையியல் அறக்கொடைத் தவிசு
08. சட்டமருத்துவப் பேராசிரியர்
09 மருந்தியல் பேராசிரியர்
10 அறுவை மருத்துவம்
11. விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11- உடற்றொழியல்/சமுதாய மருத்துவம்/சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியல் /நோயியல்/மருந்தியல் / மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் /குழந்தை மருத்துவம் /மனநோய் மருத்துவம் / அறுவை மருத்துவம்/உடலமைப்பியல்
12. தற்காலிக விரிவுரையாளர் உடற்றொழியல்/சமுதாய மருத்துவம்/சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல் நோயியல் /மருந்தியல்/ மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ மனநோய் மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ உடலமைப்பியல்
13 ஆங்கில போதனாசிரியர் தரம் 11
14. தற்காலிக செய்முறை காட்டுநர் உயிரிரசாயனவியல்

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத் தவிசாளருக்கும் விண்ணப்ப முடிவு திகதி 1993-03-10 ஆகும். ஏனையோருக்கு முடிவு திகதி 1993-02-15.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர் தரம் 11:
ரூபா 12,200 - 6x300- 14,000/-
(மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11:
ரூபா 8,000 - 5x250- 9,250/-
(மாதமொன்றுக்கு)

விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 4,500 - 10x200- 6,500/-
(மாதமொன்றுக்கு)
(மருத்துவபீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் இரண்டுபடி அதிகமாக வைக்கப்படுவர் அதாவது 4,900/- சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)
ரூபா 4,900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

தற்காலிக செய்முறை காட்டுநர்:
ரூபா 3,250/- மாதமொன்றுக்கு (நிலையானது) (பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போர் 3,000/- ரூபா மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

ஆங்கில போதனாசிரியர் தரம் 11
ரூபா 3,500/- மாதமொன்றுக்கு (நிலையானது)

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்பத்திரங்களை ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ தாபனக் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். தபால் மூலம் இவ் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் பதிவாளர்/நிதியாளர் பெயரில் ரூபா 20/-க்கான காசுக் கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடையதும் சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் இப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-01-02.
(சி-4118)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பு சான்றிதழுக்கு பதில் சுருக்கப் பிரதியை ஏற்கவும்

## மேலதிகப் பதிவாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10 பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை சேர்க்கும்போது அவர்களின் பிறப்பை அத்தாட்சி செய்யும் சுருக்கப்பிரதியை அனுமதிக்கவும்.

— இப்படியான வேண்டுகோளை யாழ். செயலக மேலதிகப் பதிவாளர் திரு. ஏ. பொன்னம்பலம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்துள்ளார்.

முதலாம் ஆண்டு அனுமதிக்காக பிறப்புச் சான்றிதழ் தேவை என ஏராளமானவர்கள் விண்ணப்பிப்பதாகவும்—

ஆனால் சகலருக்கும் உடனடியாக சான்றிதழ் வழங்க முடியாதுள்ளதாகவும்—அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிள்ளை பிறந்தவுடன் பதிவாளர்களால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழின் சுருக்கப்பிரதியை பாடசாலை அனுமதிக்கு ஏற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிறப்புச் சான்றிதழ் சுருக்கப் பிரதிகளில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அது தொடர்பாக தம்முடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## வாழ்வகம் உடுவிலுக்கு

இதுவரை காலமும் தெல்லிப்பளையில் அமைந்திருந்த விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகம் இனிமேல் உடுவில், மல்வம், சுவாமி ஞானப்பிரகாசர் வீதியில் இயங்கவுள்ளது.

உடுவில் புதிய மனை இன்று ஞாயிறு முற்பகல் 10-30 மணிக்குத் திறந்து வைக்கப்படும். [அ]

## கைது!

தெஹிவளையில் உள்ள வர்த்தக வங்கி ஒன்றைக் கொள்ளையிட வீடு ஒன்றில் தயாராகிக் கொண்டிருந்த ஆயுதக் குழு ஒன்றை பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## புனரமைப்பு

நீண்ட காலமாக திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்த முத்தையன் கட்டுக் குளத்தன் புனரமைப்பு வேலைகள் கடந்த அக்டோபர் மாதம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புனரமைப்பு வேலைகளின் முதற்கட்டமாக குளத்தின் மோசமாசப் பாதிக்கப்பட்டிருந்த அணைகள் திருத்தப்பட்டுள்ளன. (க)


## அறிவித்தல்

அனைத்து தெங்கு - பனம் பொருள் கூ. சங்கங்களின் அங்கத்தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்களுக்கு

**தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்**

காலம்: 11 - 01 - 1993 திங்கட்கிழமை
காலை 10-00 மணி
இடம்: நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றல்

தமிழீழ மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள ஐந்து அம்சக் கோரிக்கையை வெளிப்படுத்துமுகமாக இது 'எமது போராட்டம்' எனும் உணர்வுடன் கூட்டுறவாளர்களாகிய நாம் இணைந்து, கலந்து போராட்டத்தின் நோக்கம வெற்றிபெற எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

குறித்த தினம் காலை, கிளைகளில் கொள்வனவை மட்டும் நேர காலத்துடன் செய்து விட்டு, மாலை வழமைப் பிரகாரம் இயங்கவும் ஒழுங்குகள் செய்யவும்.

இப் போராட்டத்தை முன்னிட்டு 11 - 01 - 1993 நடைபெறவிருந்த மாகாந்தக் கருத்தரங்கு 15-01-1993 வெள்ளிக்கிழமை பிற்போடப்பட்டுள்ளது என்பதையும் அறியத் தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ.ப.பொ.கூ. சமாசம்.
யாழ்ப்பாணம்

(சி-4126)

தாதிப் பயிற்சி நெறி

DIPLOMA IN NURSING

**28 - 01 - 1993 இல்**

ஆரம்பமாகின்றன.

1 தாதியர் பயிற்சிப் பாடத் திட்டங்கள் (20 பாடங்களை உள்ளடக்கியது)
2. பிரபல வைத்தியசாலையில் செய்முறைப் பயிற்சி
3. பதிவு பெற்ற தாதியப் போதனாசிரியர்களின் விரிவுரைகள்.
4. உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கேற்ற அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
5. ஒரு வருட காலப் பயிற்சி.
6. இலவச ''அக்கு பங்சர்'' வைத்தியப் பயிற்சி.

குறிப்பு: மாவீரர், போராளிகள் குடும்பத்தவர்களுக்கு இலவசப் பயிற்சி.

அதிபர்,
**சாயி மருத்துவக் கல்லூரி,**
(பதிவு பெற்றது)
இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்நகர்.
(சி-2880)

அங்லோ ஏசியன் பேர்டிலைசேர்ஸ் கம்பனி வழங்கும் ...

**'நியூட்றா பொஸ் சுப்பர் கே'**
**NUTRA PHOS SUPER K**

1) நெற்பயிர்களில், விளைவை 30 வீதம் வரை அதிகரிக்க குடலைபருவத்திலும், பூக்கும் பருவத்திலும், பால் பருவம் ஆரம்பிக்கும்போதும் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.
2) கத்தரி, கோவா, உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் மரக்கறிப் பயிர்களில் விளைவை பன்மடங்கு அதிகரிக்க, பயிர்கள் பூக்க ஆரம்பிக்கும் காலத்திலிருந்து 14 நாட்கள் இடைவெளியில் நியூட்றா பொஸ் சுப்பர் கே தெளிக்கவும்.

பீடை நாசனிகள் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
(சி/2871)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 29 — 12 — 1914
உதிர்வு: 11 — 12 — 1992

அமரர்
**சிவக்கொழுந்து இராசநாயகம்**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், காலம் எல்லாம் கலங்கரை விளக்கமாய் இருந்து இப்பாரினில் எம்மை உயர்நிலைக்கு ஆளாக்கி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்துக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

12-12-1992இல் நடைபெற்ற எமது குடும்பத் தலைவரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய வைபவத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
''விமலஸ்தான்'',
இணுவில் மேற்கு. இணுவில்.
(23941)

**கலை, வர்த்தக கல்லூரி**
யாழ்ப்பாணம்.

12-01-1993 அன்று தொடங்க இருந்த பகல் நேர பிரிவு III வகுப்பு, அன்று ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

- நிர்வாகி.
(சி/4169)

**BITSMANS**
கல்வி நிறுவனம்
மானிப்பாய்.

**A/L 93**
கலை, வர்த்தகம்
**DAY CLASS**
(எமது வழமையான ஆசிரியர்களினால்)
ஆரம்பம்:
**12-01-93**
செவ். 8-00 a.m.
குறிப்பு: வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்.
(சி/4159)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 06 — 03 — 1922
உதிர்வு: 22 — 12 — 1991

**அமரர் நாகலிங்கம் சிவயோகம்**
திதி: 10 — 01 — 1993

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி, திடீரென மீளாத் துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! ஓர் ஆண்டென்ன, நூறாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்காதம்மா!

தங்களின் ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''இ த்தினகிரி'',
கொக்குவில் மேற்கு,
அரசடி.
(5714)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வெளிவந்துவிட்டது

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத் தாள்கள் (விடைகளுடன்) பிரபல புத்தகசாலைகளில் மட்டும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4104)

### தேவை

தனியார் மருத்துவமனை ஒன்றிற்கு சுத்திகரிக்கும் தொழிலாளர் தேவை. 140, பலாலி வீதி, திருநெல்வேலி என்ற விலாசத்திற்கு உடன் விண்ணப்பிக்கவும். (23988)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் பலர் இருக்கிறார்கள். முங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். சந்திப்பு: சனி காலை. (23968)

### சேவை

'டவுட் கிளியரிங்' சந்தேகம் தீர்க்கும் சேவையில் பொறியியல் துறையில் O/L முதல் உயர்கல்வி வரை விளங்க முடியாமல் தவிர்க்கும் விடயத்தை முதலில் எழுதி அனுப்பவும். ஏனைய சேவைகள் பற்றிய விவரம், இடம், கட்டணம் என்பன அறிவிக்கப்படும். S. C. இம்மானுவேல் பொறியியலாளர், 'புஷ்பவிலா', சங்கானை றோட், அச்சுவேலி. (23996)

### இடமாற்றம்

செ. இராசேந்திரன் (சோதிடர்) கைப்பலனறிஞர்-கோளறிவாளர் திருவுளம். கிரிதரன் வீதி, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. இன்று முதல் சேவை வதிவிடம் 'விரலட்சுமி', (முதல் வீடு) கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு. (23991)

### திருமண சேவை

உங்களுக்குத் தகுந்த, பொருத்தமான மணமக்களை அடையவும், மனநிறைவுடன் வாழவும் நாடுங்கள்: புதிய மாங்கல்யா மல்ர்ரி சேர்விஸ், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர் செவ்வாய்க்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் 1 மணி வரை சந்திக்கலாம். (23986)

### புதிய உலகம்

புதிய உலகம் வெளிவந்து விட்டது. இரு மாத சமூக சஞ்சிகை பிரதி ரூபா 15/-. ஆண்டுக்கு ரூபா 70/-. இடம் பெயர்ந்துள்ள சந்தாதாரர்கள் தொடர்புகொள்ளவும் 115, 4ஆம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (சி-4119

### O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 30 வருட அனுபவம் உள்ள B Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும் இல 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [23999]

### MATHS

ஆண்டு 5இலிருந்து G .E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும், குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (23998)

### கல்வி

புலமைப் பரிசில் வகுப்பில் இருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும் A/L வரையும் சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (23997)

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக்கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம்; 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம் (23921)

### இசை வகுப்பு

கிற்றார் (Guitar), ஓர்கன் (Organ) மிருதங்கம், தபேலா வகுப்புக்கள் 14-01-93 பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பம். தொடர்பு: A. S. சாந்தன், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. (24000)

## ஆண்டு 5

புலமைப் பரிசில் வகுப்புகள்

தமிழ்
கணிதம் } திருக்கேதீஸ்வரன்

Sp. Trd. Maths

**ஆரம்பம்: 10 - 01 - 1993**

காலை 9-00

★ ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

★ மாதாந்தம் மாதிரிப் பரீட்சைகள் நடத்தப்படும்.

## கந்தசாமி கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி,
மணி பேக்கரி முன்பாக)
கல்வியன்காடு.

[24001]

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
1912 — 09 — 01

இறப்பு!
1992 — 01 — 10

**சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

''சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

ஓர் ஆண்டு மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது - ஐயா!

இவரின் ஆன்ம சாந்திக்காக 12 - 01 - 1993 செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும், 13 - 01 - 1993 புதன்கிழமை மாலை 5-15 மணிக்கு சங்கானை புனித சலேசியார் ஆலயத்திலும் திருப்பலிப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்பில் நினைவுகூரும்,
மனைவி, மகள்.

புனித செபஸ்தியார் வீதி,
சில்லாலை. (23995)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 14 | 10 |
| 11 | 01 |
| 1908 | 1992 |

எமது கல்லூரி வர்த்தகக் கல்வியின் சிற்பியும் உடுவில் வாசியுமான

**அமரர் மூ. சுப்பையா**

அவர்களுக்கு எமது நினைவஞ்சலிகள்.

வர்த்தக மாணவ மன்றம்,
யா/கனகரத்தினம் ம. ம. வி.

(23981)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 01 | 11 |
| 07 | 12 |
| 1923 | 1992 |

திருமதி

**நாகராசா கோசலை அம்மா**

(வருணன் — அச்சுவேலி)

(இளைப்பாறிய ஆசிரியை - சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம், அச்சுவேலி மகாவித்தியாலயம், பத்தமேனி - இரத்தினேஸ்வரி வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியை)

திதி: 10 — 01 — 1993

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாச விளக்காய் பலரும் மதிக்க வாழ்ந்திட்ட எங்கள் அன்புத்தாயே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்குதான் சென்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சண்டிலிப்பாய் பத்தி,
சண்டிலிப்பாய் (7619)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 07 | 11 |
| 07 | 12 |
| 1928 | 1992 |

திருமதி

**தனலட்சுமி பொன்னம்பலம்**

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு — குறள்.

11-12-92 இல் சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள். அஞ்சலி செலுத்தியவர்கள், இவர் நோயுற்றிருக்கும் போது கைகொடுத்து உதவியவர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும், எமக்கு ஆறுதல் வழங்கிய யாவருக்கும எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (10-01-1993) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்.

68, பலாலி வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம். (23948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## ஏகோபித்து உறுதி பூணுக!

ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் 1974 ஜனவரி பத்தாம் நாள் மறக்கமுடியாத ஒன்றாகும். அன்று — நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் இறுதிநாளன்று — தமிழ் விழாக் காணச் சென்ற ஒன்பது தமிழ் மக்கள் பொலிசாரால் கொல்லப்பட்டனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த ஒரு சில வருடங்களிலேயே சிங்களவர்கள் தமிழர்களை அடக்கி ஆளத்தொடங்கி விட்டார்கள். ஆனால் தங்கள் சுயநலம் கருதிய அப்போதைய தமிழ்த் தலைவர்கள் பலர், தேசிய ஐக்கியம் என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு அடக்குமுறையைக் கண்டும் காணாதவர் போல இருந்தனர்.

1956இல் கொழும்பு அரசாங்கம் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டம் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பியது. தீவிர அடக்குமுறையின் ஆரம்பம் அது என்பதை அவர்கள் உணரத் தொடங்கினர். எனினும் 1970 களிலேயே 'முதியோர்' அரசியலும், தலைமைத்துவமும் வீழ்ச்சி காணத் தொடங்கின. அதற்குப் பதிலாக உத்வேகம் கொண்ட இளைஞர் அரசியலும் தலைமைத்துவமும் தலையெடுத்தன.

இத்தகைய ஒரு பின்னணியில் தான், தமிழர்களுக்கு ஒரு சில சலுகைகளை வழங்கிய அரசமைப்புச் சட்டமும் நீக்கப்பட்டு தமிழர்களை நிரந்தரமாகவே இரண்டாந்தரப் பிரசைகளாக வைத்திருப்பதற்கு 1972இல் புதிய குடியரசு அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது.

தங்களை பூரண அடிமைகளாக வைத்திருக்கவே சிங்களவர்கள் விரும்புகின்றனர் என்பது தமிழர்களுக்கு அப்போது தெளிவாகியது. அதன் காரணமாக உரிமைப் போராட்டம் உத்வேகம் அடையத் தொடங்கியது. வழமைக்கு மாறான புதிய வடிவமும் பெறத் தொடங்கிற்று.

இதனைக் கண்டு கொண்ட சிங்கள அரசு, தனது அடக்குமுறையை அதிதீவிரப் படுத்தியது. தமிழ் மக்கள் மீதான அடாவடித் தனங்கள், பொலிஸ் அத்துமீறல்கள் என்று கட்டவிழ்த்து விட ஆரம்பித்தது. அதன் முதல் அத்தியாயமே தமிழாராய்ச்சி படுகொலைகள்.

அந்தப் படுகொலைகள் தமிழ் மக்களை மேலும் விழிப்படையச் செய்தன. விடுதலைப் போராட்டத்தைத் கனதியுடனும் விரைவுடனும் முன்னெடுக்க உந்து சக்தியாக அமைந்தன.

இந்த இடைப்பட்ட காலத்தில், அப்பாவித் தமிழர்கள் அரசாங்கத்தினால் அதன் படைகளினால்—கொன்று குவிக்கப்பட்ட சம்பவங்களின் பட்டியல் பல்லாயிரக் கணக்கில் நீளும். தமிழ் மக்களின் அவலங்களையும் அழிவுகளையும் அவை சோகக் கதைகளாகப் பதித்துள்ளன.

அடக்கப்படுபவனும், ஒடுக்கப்படுபவனும் அடங்கிக்கிடப்பதில்லை. வீறு கொண்டெழுந்து விடுதலைபெற்றே தீருவான். அடிமைத்தளையை அறுத்தெறிவதற்காக எந்த துன்பத்தையும் தாங்குவதற்கு அவன் மனோவலிமையும் பெற்றுவிடுகிறான்.

ஈழத் தமிழ் மக்களும் அத்தகைய நிலையிலேயே தமது விடுதலையை ஈட்டுவதில் மனோவலிமை பெற்றுவிட்டார்கள். அரசாங்கம் நடத்தும் ஒவ்வொரு கொடூர நிகழ்வும் அவர்களின் மன உறுதியை மேன்மேலும் பலமாக்கி உருக்காகக் காய்ச்சுகின்றது.

விடுதலை நாடி முன்வைத்த காலை பின்வைக்காமல் இருக்கத் தமிழர்கள் இன்றைய நாளில் ஏகோபித்து உறுதி பூண்பது அவசியம்.

# தெரிவுக்குழு வெறும் அரசியல் நாடகமே
# அது பிரச்சினையை மேலும் வளர்த்துள்ளது

*''திவயின'' ஞாயிறு இதழில் வெளியான அரசியல் கடிதத்தின் மொழிபெயர்ப்பை இங்கு தருகிறோம்.*

கிராமியக் கைத்தொழில் உல்லாசத்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளது அவர் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற ரீதியிலேயாகும். இருப்பினும் முக்கிய அமைச்சரான அவர் தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்.

வடக்கு - கிழக்கு இரு மாகாணங்களும் இணையாத ஒரு தீர்வுக்கு தான் இணங்கமுடியாதுள்ளதாகவும் தெரிவுக்குழு அவ்வாறான ஒரு தீர்வுக்கு வெகு தூரத்தில் இருப்பதாலேயே தெரிவுக்குழுவில் இருந்து தான் இராஜினாமாச் செய்வதாக திரு. தொண்டமான் பத்திரிகை அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

ஆனால் தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை ஐ. தே. கட்சி ஏற்றுள்ளது இங்கு தான் முதலாவது பிரச்சினை தோன்றுகிறது. தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பது ஐ தே கட்சியின் கொள்கையை எதிர்ப்பதாகும். ஆனால் அவர் நிராகரித்ததும் எதிர்ப்பதும் ஐ. தே கட்சியின் கொள்கையையே எனில் திரு தொண்டமான் ஐ தே கட்சியின் அரசாங்கத்தில் தொடர்ந்தும் அமைச்சராக இருப்பதன் நோக்கம் தான் என்ன?

அரசாங்கத்துடன் தொங்குவதன் நோக்கம் என்ன?

இக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பினரிடமிருந்தும் தெளிவான, திருப்தியான பதில் இல்லை. எனவே இந்நிலையில் ஏதோ ஒன்றை மக்களுக்கு மறைக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. திரு. தொண்டமான் இவற்றையெல்லாம் விளையாட்டுக்காகவா செய்கிறார்?

திரு. தொண்டமான் அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்து அமைச்சரவையின் ''கூட்டுப் பொறுப்பை'' மீறிய சம்பவங்கள் பல உண்டு. இதையும் தற்போதைய சம்பவத்துக்கு விளக்கமாகத் தரப்படலாம் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் கட்சி ஏற்றுக் கொண்ட தீர்வினை அவ்வரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவரே விமர்சனஞ் செய்து நிராகரிப்பது ''கூட்டுப் பொறுப்புக்கு'' ஊறு விளைவிக்காதா? அவர் மீது எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையுனும் எடுக்கப்படாததும் அவரிடமிருந்து விளக்கம் கோரப்படாததும் புதுமையே ஆனால் அரசாங்கத்திலுள்ள வேறு ஓர் அமைச்சர் இவ்வாறான விதத்தில் செயற்பட்டிருந்தால் அவருக்கு என்ன நேர்ந்திருக்கும எனக் கூறமுடியாது.

நிலைமை எவ்வாறாயினும் பதில் தரவுள்ளது?

அன்று தற்காலிகமாக இணைக்கப்பட்ட இருமாகாணங்களையும் தற்போது வெவ்வேறாக்க ஐ. தே. க தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. பிரச்சினை தொடர்பான உண்மையான நிலையை அறிந்து அல்லது வேறு காரணங்களை முன்வைத்து வடக்குக் கிழக்கு மாகாணங்களை வெவ்வேறாக்கும் தீர்மானத்திற்கு ஐ தே.க. இணங்கியுள்ளது. ஆனால் திரு தொண்டமான் இதை எதிர்ப்பதுடன் 5 வருடங்களாக இம்மாகாணங்கள் இணைந்திருந்த வரலாற்றையும் எடுத்துக் காட்டுகிறார்

இதனால் ஒரு புறத்தில் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு ஐ தே. கட்சியால் தரப்பட்டுள்ள தீர்வுக்குப் பிரச்சினை தோன்றியுள்ளது தெரிகிறது மறுபுறத்தில தமது கொள்கையை ஏற்காதவர்களுடன் தொங்கிக் கொண்டிருப்பதன் மூலம் திரு. தொண்டமான் பிரச்சினையைத் தோற்றுவிக்கிறார்.

இதிலிருந்து தெளிவான விடயம் ஒன்று தெரிகிறது அநாவது வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கண்டறிய முன் வைக்கப்பட்ட சகல பிரேரணைகளும் சேர்ந்து ஓர் அரசியல் நாடகம் என்பதை மக்கள் அறிந்து நாடகமேயன்றி வேறொன்றுமில்லை. பிரச்சினை உக்கிரமடைந்ததேயன்றி வேறு எதுவும் ஏற்படவில்லை.

அந்த நாடகம் இன்று பலருக்கு ஞாபகத்திலில்லை. ஐ. தே. கட்சிக்கு வாக்களித்தவர்களைப் போலவே அதற்குப் பொறுப்பான அரசியல்வாதிகளுக்குக்கும் அந்தச் சம்பவங்களும் ஞாபகத்திலில்லை அவ்வாறான அரசியல் நாடகமே மீண்டும் அரங்கேறவுள்ளது இந்நாடகத்தின் மையக் கருத்து என்ன?

திரு. தொண்டமானின் கூற்றுப்படி அதன் மையக்கருத்து தமிழ் மக்களின் அபிலாசைகளும் அவர்களது தனித்துவமும் தொடர்பான பிரச்சினைகளேயாகும்.

தமிழ் மக்களின் அபிலாசைகளும் தனித்துவமும் காரணமாக எடுக்கப்பட்டுள்ள இந்த அரசியல் நாடகத்தினால் நாட்டின் சமீபகால வரலாற்றில் பல விபரீதங்களை மட்டுமே உருவாகின. இக்கால எல்லையில் நாட்டின் சிறந்த பிரஜைகள் பலரை நாடு இழந்துள்ளது. துணிவு மிக்க பல படைத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். வீரமிகு இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

இவை எல்லாம் இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அரசபடைகளின் துன்பங்கள் குறித்து அரசாங்கத்திற்குள் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. இது திரு தொண்டமான் அரசாங்கத்துடன் சேர்ந்து அரங்கேற்றும் அரசியல் நாடகத்திற்குக் குறைந்ததல்ல எனக் கருதப்படுமாயின் அது தவிர்க்கக் கூடியதொன்றல்ல

★

# தொண்டா அரசுடன் தொங்குவதால் தெற்கில் மீண்டும் "பயங்கரயுகம்"?

தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை நிராகரிப்பது ஐ தே கட்சியின் கொள்கையை எதிர்ப்பதாகும். ஆனால் அவர் நிராகரித்ததும் எதிர்ப்பதும் ஐ. தே கட்சியின் கொள்கையையே எனில் திரு தொண்டமான் ஐ தே கட்சியின் அரசாங்கத்தில் தொடர்ந்தும் அமைச்சராக இருப்பதன் நோக்கம் தான் என்ன?

ஐ. தே. கட்சியூடாகவே திரு. தொண்டமான் நாடாளுமன்றம் வந்தார். அவ்வாறான ஒருவர் கட்சியின் கொள்கை, கட்சி ஏற்றுக் கொண்ட ஒரு தீர்வுத் திட்டத்தை பகிரங்கமாக விமர்சனம் செய்து நிராகரிப்பதாயின் அவரைத் தொடர்ந்தும் ஐ. தே. கட்சி தனது அரசாங்கத்தில் அமைச்சராக வைத்திருப்பதன் நோக்கமென்ன?

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை ஏற்று செயற்படுத்துவோம் என ஐ. தே க தெரிவித்திருந்தது பலரும் ஏற்கும் தீர்வுத் திட்டத்தை தாங்களும் ஆதரிப்போம் என ஸ்ரீ. ல. சு. க. தெரிவித்திருந்தது.

திரு. தொண்டமான் தலைவராகவுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளும் தெரிவுக்குழுவின் தீர்வுத் திட்டத்தை ஏற்காமை, ஏகோபித்த முடிவு ஒன்றைக் காண முடியாமைக்கு ஒரு காரணமாகும். தெரிவுக்குழுவின் தலைவரால் அவரது கையொப்பத்துடன் மட்டுமே இடைக்கால அறிக்கையை சபாநாயகரிடம் ஒப்படைத்த சம்பவமும் அத்தெரிவுக்குழு அங்கத்தவர்களால் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது.

### மக்களுக்கு மறைக்கிறார்கள்

அரசாங்கம் கூறும் இந்தப் பொதுவான முடிவு, இவ்வாறான பிரச்சினைகளுக்குட்பட்டிருக்கும்போது, திரு. தொண்டமான் அரசாங்கத்தில் அமைச்சராக தொடர்ந்து இருப்பது சந்தேகத்தைத் தோற்றுவிக்கிறது மொத்தத்தில் முரண்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில் தொண்டமான தொண்டமான் மீது அரசு நடவடிக்கை எடுப்பதில்லை. அவ்வாறே தனது கொள்கைகளுக்கு உடன்படாத அரசாங்கத்திலிருந்தும் அவர் இராஜினாமாச் செய்வதுமில்லை. இதில் எந்தவித இரகசியமும் இல்லை என யாராலும் கூறமுடியுமா? இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களுக்குச் சமமான அதிகாரங்களைக் கொண்ட நிர்வாக முறையை வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்துள்ள தெரிவுக்குழு வடக்கும் கிழக்கும் தனித் தனியாகவே இயங்கும் எனத் தெரிவித்துள்ளது.

ஆனால் திரு தொண்டமான், வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வொன்றினைத் தேடும்போது வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும் என்ற இடத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இவ்விரு மாகாணங்களும் கடந்த 5 ஆண்டுகளாகத் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளதை இதற்கு ஒரு காரணம் என திரு. தொண்டமான் எடுத்துக் காட்டுகிறார்.

5 வருடகாலமாக இந்த இரு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தது அவை நிரந்தரமாக இணைக்கப்படுவதற்கு காரணமாக அமைய முடியுமாயின், நூற்றாண்டு காலமாக இம்மாகாணங்கள் சிங்கள அரசர்களின் ஆட்சியின் கீழ், இருந்தது பற்றி திரு. தொண்டமான் என்ன கூறப் போகிறார்

### தமிழர்களுக்கு மட்டுந்தானா?

தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அவர்களுக்குத் தன்னாட்சியுரிமை வழங்கப்பட வேண்டும் எனத் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் ஒருபோதும் எவருக்கும் அடிபணியமாட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். தனித்துவமும், தன்னாட்சியுரிமையும் தமிழ் மக்களுக்கு மாத்திரந்தானா? [illegible]

கொண்டதேயாகும் இந்த நாடகத்திலுள்ள விசேடம் என்னவெனில் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. பிரச்சினையை மேலும் அதிகரிக்கச் செய்ததுதான் மிச்சம்.

இவ்வாறான அரசியல் நாடகம் 1987ல் வன்முறைகளுக்கு வழியமைத்தது என்பதைப் பலர் மறந்திருக்கலாம். அதுவே இலங்கை —இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும். மாகாணசபை முறையை அறிமுகப்படுத்திய நாடகமும் ஆகும் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட அந்தத்தீர்வு, கலவரங்களின் மத்தியிலேயே செயற்படுத்தப் பட்டது. அரசாங்கக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளுக்குக் கூடப் போக முடியாமல் கொழும்பு ஹோட்டல்களில் சிறையிருக்க நேரிட்டது. ஏற்பட்ட பயன் தான் என்ன?

1987 யூலை 29ஆந் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கலவரங்கள் மூண்டதெனவும், பல்வேறு இடங்களிலிருந்து கொழும்பை நோக்கி வந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளை பொலிஸாரை ஈடுபடுத்தி திருப்பி அனுப்பியதாகவும் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா 25 - 02 - 1988 அன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். களுத்துறை, காலி, அம்பாந்தோட்டை மாத்தறை ஆகிய இடங்களில் பெருமளவில் கலவரங்கள் இடம்பெற்றன எனவும் 28-07-87 லிருந்து 02-08-87 வரை இது தொடர்பான சம்பவங்கள் 2527 இடம்பெற்றன என்றும் அவர் தெரிவித்தார்.

### மீண்டும் அரங்கேறும்

அச்சம்பவங்களால் ஏற்பட்ட சேதங்கள் 20 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளன இதனால் ஏற்பட்ட பலாபலன்கள் என்ன? இவற்றினால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டதுமில்லை. [illegible] ஓர் அரசியல்

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 10

அமரர் ஈ கே. குமரையா ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய கழகம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்

மாலை 3 மணிக்கு — 3 ஆம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவுசெய்வதற்காக— நடைபெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அரியாலை அணி மோதும்.

மாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகும் இறுதியாட்டத்தில் சென். ஹென்றிஸ் அணியை எதிர்த்து பாடும் மீன் அணி மோதும். (உ.-17)

★ ★ ★

ஹற்றன் நஷனல் வங்கி. யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 3.30 மணி:- சென்றலைட்ஸ் வி. க அணி எதிர் ஜொனியன்ஸ் கறுப்பு அணி

★ 4 30 மணி:- யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி அணி.

இந்த ஆட்டங்கள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். (உ)

## நாளை

யாழ்ப்பாணம், ஜன. 10

மானிப்பாய் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை மாலை 4மணிக்கு கல்லூரியில் நடைபெறும். [க]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவிருந்த - குழந்தை சண்முகத்தினால் தயாரித்து வழங்கப்படும் — ''உறவுகள்'' நாடகம் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் அறிவித்திருக்கிறது (உ)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன 10

நேற்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற இருந்த யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-31]

## இன்று

முன்னாள் சிரேஷ்ட ஆணையாளரும் யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு சங்கங்களின் சமாசத்தினதும், யாழ். மாவட்ட உலர்வலய அபிவிருத்தி மன்றத்தினதும் ஸ்தாபகருமாகிய அமரர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் நினைவு மலர் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க-30)

★ ★ ★

இன்று நடைபெறும் மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவில் திருவாசக விழாவில் 6.00 மணிக்கு விசேட பூசை வழிபாடும், 7 00 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை திருவாசகம் முற்றோதலும் இடம் பெறும்.

தொடர்ந்து ''புத்தரை வாதில் வென்ற திருவாதவூரர்'', ''சித்தம் அழகியார்'', ''திருவாசகம் என்னும் தேன்'' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும். (உ-30)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் 23 ஆம் வருட வருடாந்தப் பஜனை ஊர்வலம் இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். [உ-28]

★ ★ ★

பண்ணாகம் சத் சங்க வட்டத்தினரின் ஏற்பாட்டில் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி இன்று அதிகாலை முதல் முழு நாளும் இடம்பெறும். [உ-28]

## இன்று கடைகள் திறப்பு

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நகரில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டிருக்கும்

நேற்று சனிக்கிழமையும் நகரில் கடைகள் முழுநாளும் திறக்கப்பட்டு பொங்கல் வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்தது. [ஒ 15]

### ஏழாவது....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் கொந்தளிப்பு நிலைமையே இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் டாக்காவுக்கான விஜயம் ரத்தானதற்குக் காரணம் என்று ராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர் அயோத்தியில் பாபரி மசூதி இடிக்கப்பட்டதை அடுத்து உத்தேச டாக்கா மாநாடு ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது (ஒ-க)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி

மஸ்கன்ஸ் லிமிட்டெட்)

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி 02-01-93 இல் கிளாலிக் கடலில் அகால மரணமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி சுபத்திரா ஆனந்தநடராஜா

கொக்குவில் கிழக்கு. (24011)

## வெள்ளைக்குட்டி செல்லத்துரை

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி செல்லத்துரை (பிரபல வர்த்தகரும், சிறுப்பிட்டி ஞானவைரவர் தேவஸ்தான கணக்காளரும், சமூக சேவையாளரும்) அவர்கள் 8-1-93 அன்று காலை 9 மணியளவில் காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி கமலாதேவியின் அன்புக் கணவரும், ஞானசேகரன் (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), மைதிலி (புத். சோமஸ். கல்லூரி), சர்வாம்பிகை (புத். சோமஸ். கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இராசமணி, திரு. கந்தையா (இளைப்பாறிய தபால் அதிபர், சுன்னாகம்), காலஞ்சென்ற திருமதி மனோன்மணி, திருமதி மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி இராசம்மா, திரு. மயில்வாகனம் (உதவி வழங்கல் ஆணையாளர் - வடக்கு. வவுனியா), கனகசிங்கம், தம்பிராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-1-93 அன்று மாலை 5 மணியளவில் அவரது இல்லத்தில் நிறைவெய்தியது என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்.
திருமதி செ. கமலாதேவி
(மனைவி)

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (24014)

## B S அந்தோனிப்பிள்ளை

மாதகலைப் பிறப்பிடமாக கொண்ட B S அந்தோனிப்பிள்ளை 8-12 1992 இல் மாதகலில் காலமானார்

இவர் மேரி நெவிலின் அன்புக் கணவரும், அருமைநாயகம் (கனடா), சுகந்தா, சுசி (திருகோணமலை), ஜோய் (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் விமலா (கனடா), A J நற்கருணைபிரகாசம் (நேசா) (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்), மரியநாயகம் திருகோணமலை), A. J. பிரகாசராசா (சேவியர், கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விமல் (கனடா) சுவித்தா (கனடா), ஜனா (கனடா), கிருஸ்சா, பமினா, நியோமி, டுஸ்சாந்தன், செறொலினா (கனடா), அமன்டா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 9-12-1992 மாதகலில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
A. J. நற்கருணைபிரகாசம்
(நேசா)

183, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (24007)

## அரியகுட்டி அன்னப்பா

புளியங்கூடலைச் சேர்ந்த அரியகுட்டி அன்னப்பா காலமாகிவிட்டார். இவர் மாரிமுத்துவின் தாயாராவார். தகனக்கிரியை இன்று 10-1-1993 காலை 10 மணிக்கு கோப்பாய் இந்துமயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. நடராசா

பழம் றோட்
வீரபத்திரர் கோவிலடி.
கோப்பாய் தெற்கு கோப்பாய் (24006)

## கதிரவேலு ஐயாறு

**Kathiravelu Ayaru (A. R. I. C. S)**

(Charted Surveyor Retd. Supdt. of Surveys)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சேர். பொன் இராமநாதன் வீதியில் வசித்தவரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், விமலராணி (U. K.), பவளராணி (கனடா) ரஞ்சிதராணி (கனடா), டாக்டர் கேவிகாராணி (U K.), இராஜேஸ்வரன் ஐயாறு (ஸாம்பியா), சாந்தகுமார் ஐயாறு (U. K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. நடேசன் (U. K.), திரு. பிரான்சிஸ் (கனடா), டாக்டர் செல்லத்துரை (யாழ்ப்பாணம்), திருமதி அனுசாம்பிகை (ஸாம்பியா), திருமதி நிரஞ்சனா (U. K) ஆகியோரின் அன்பு மாமனாருமாகிய கதிரவேலு ஐயாறு லண்டனில் 17-12-92 இல் சிவபதமடைந்தார் என்பதை உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும வருத்தத்துடன் அறியத் தருகின்றேன்.

தகவல்:
Dr. V. செல்லத்துரை
(மருமகன்)

வண். கிழக்கு ஆங்கில வைத்தியசாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (24002)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-01-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### ஆர்ப்பாட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளும் மக்களுக்கு யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் தாகசாந்தி வழங்குவர்.

ஆர்ப்பாட்டப் பேரணி நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் இருந்து நாளை காலை 10 மணிக்குப் புறப்படும் என்றும், மக்களை அதற்கு முன்னர் அங்கு வந்து கூடுமாறும் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதேவேளை பல பொது அமைப்புகளும் தத்தமது அங்கத்தவர்களைப் பேரணியில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளன.

அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள். பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், மாணவர் அமைப்புகள் என்பனவும் அவற்றுள் அடங்கும். [அ-17-30.

### விடைத்தாள்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாள்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட "குமண" கப்பல் அங்கு விடைத்தாள்களை இறக்காமல் நேற்று மீண்டும் பருத்தித்துறையை வந்தடைந்தது.

திருகோணமலையில் "குமண" தரித்து நின்றபோது விடைத்தாள்களை இறக்கிக் கொழும்புக்கு அனுப்புவதற்கான முயசி ஏதும் எடுக்கப்படவில்லை என்றும —

இதற்கிடையில் யாழ். செயலகம் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்து சுமார் ஆயிரத்து 200. மெற்றிக் தொன் மாவை பிரிமா ஆலையில் இருந்து ஏற்றிக்கொண்டு 'குமண' கப்பல் நேற்று பருத்தித்துறைக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடைத்தாள்களுடன் சென்ற யாழ். கல்வி அலுவலக அதிகாரி கடந்த ஐந்து நாட்களாக விடைத்தாள்களுக்குப் பொறுப்பாகக் கப்பலில் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறார்.

தான் சுகவீனமுற்றிருப்பதாகவும் தமக்காக புதியவர் ஒருவரை அனுப்பி வைக்கும்படியும், கப்பலில் இருந்து நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு அவர் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

தற்போது பருத்தித்துறை வந்துள்ள "குமண" கப்பல் மாவை இறக்கிவிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குப் பின்னரே மீண்டும் இங்கிருந்து புறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

அதுவரை கப்பலில் உள்ள விடைத்தாள்களுடன் அவற்றுக்குப் பொறுப்பாக கல்வி அதிகாரி ஒருவர் தங்கியிருக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

உ-5-109]

## புலிகளின் நிபந்தனையை.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் குழுவின் கண்காணிப்பில் விடுதலைப் புலிகள் இயக்கமும், ஸ்ரீலங்கா அரசும் உடன்பாடு ஒன்றைக் கண்டன என்பதும்—

அந்த உடன்பாட்டை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்திருக்கும்போது, ஸ்ரீலங்கா அரசுப் படைகள் திடீரென ஒருதலைப் பட்சமாக இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து அப்பாதையைக் கைப்பற்றின என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்

இந்தக் காரணத்தினாலேயே—

பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு முன் நிபந்தனையாக அப்பகுதியிலிருக்கும் இராணுவ முகாமை அகற்ற வேண்டும் என விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்க விரும்பினால்— ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக— ஸ்ரீலங்கா அரசு தனது படைகளை பூநகரிப் பகுதியிலிருந்து வாபஸ் பெறவேண்டும் என்று புலிகள் யோசனை தெரிவித்திருந்தனர்.

பூநகரிப் பாதையைத் திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்திடமும் இந்தக் கருத்தையே புலிகள் வலியுறுத்தித் தெரிவித்திருந்தனர்.

ஆனால் ஸ்ரீலங்காப் பிரதமர்—

"பூநகரிப் பாதையைத் திறக்கத் தயார்; ஆனால் இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற முடியாது"— என அறிவித்திருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கிளாலிக் கடலேரி ஊடாகவும் பகலிலோ, இரவிலோ பொதுமக்கள் பயணம் செய்ய அனுமதிக்க முடியாது. இந்தப் பாதை தடை செய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது— என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

(உ-ஓ-3- )

### டில்லியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் விமான பணியாளர்கள் உயிர் ஆபத்தின்றி தப்பிக் கொண்டனர்.

விமானம் ஓடுபாதையில் இறங்காமல் அதற்கப்பால் காடு முரடான பாதையில் இறங்கியதால் அது தீப்பற்றிக் கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

விமானம் தலை கீழாகக் கிடந்தது என்றும் அது முற்றாக எரிந்து அழிந்து விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய விமானிகள் வேலை நிறுத்தம் செய்து வருவதை அடுத்து அங்கு ரஷ்ய விமானங்கள் போக்குவரத்துக்கென வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய விமானி செலுத்தி வந்த விமானமே நேற்று விபத்தில் சிக்கியது. விமானி தரை நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது "மொழிப் பிரச்சினை"யால் ஏற்பட்ட தடுமாற்றத்தால் தான் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

விமான விபத்துக்கான தார்மீகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அமைச்சர் தமது பதவியை ராஜினாமாச் செய்ததை, முன்னாள் பிரதமர் வி பி சிங் உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டியுள்ளனர். (ஓ-க)

# நூல் வெளியீடு

ஞானசாரியார்க்கல்லூரியில் 11 ஆம் திகதி திங்கட்கிழமை) மு. ப 9-00 மணியளவில் சித்திரக் கைநூல் வெளியீட்டு விழா நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

வி. அருளானந்தம்
(அதிபர்)

(சி/4128)

# ஆத்ம சாந்தி அஞ்சலிகள்



கணக்கியல் ஆசிரிய மேதை

## தேசிங்குராஜா யோகராஜா

ஜனனம்: 25-12-1961 சிவபதம்: 08-01-1993

எத்தனையோ கல்வி நிறுவனங்கள்
எழில் பெறவே ஏற்றமிகு கல்விச் சேவை
வித்தகனாய் மிளிர்ந்தனையே யோகராஜா
விளங்கு திரு நாமத்தோய் கணக்கியலின்
தத்துவஞ்சேர் ஆசானே செய்த சேவை
தரணியிலே மறப்போமோ? மறவோம் என்றும்
சித்தமதைச் சிவன்பாதம் சேர்த்து வைத்தாய்
சிவாத்மா சாந்தநிலை பெறுவதாக

1991 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு மாணவர்கள்.

வினைல்ஸ் கல்வி நிறுவனம்.
சுன்னாகம். (5482)

கணக்கியல் ஆசான்

## தே. யோகராஜா B Com.Hons)

அவர்களுக்கு

# கண்ணீரால் எம் அஞ்சலி

கலைகளி லோங்கும் கல்லூரி யாழிந்துவில்
கணக்கிய லாசானாய் காலடி பதித்தீர்களே!
நிலைதடு மாறிவழி யொன்று தேடியே
களைப்புற்ற எங்களை களிப்புற வைத்தீர்களே!
நிலைதனை உணர்ந்து தலையாய கடனாய்
சளையாது எமக்காய் உளமாக உழைத்தீர்களே!
சுளையாகக் கல்வி சுவைத்திடத் தந்தபின்
மலையாகத் துயரையும் சுமத்திய மாயமென்ன?
சிலையாக எமைவிட்டு நிம்மதியாய்த் தூங்குவதேன்?
நிலையாக, மீண்டுமெம் நினைவோடு வருவதற்கோ?

ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்

கலை, வர்த்தக மாணவர்கள் (1991)
யாழ். இந்துக் கல்லூரி.

2401[illegible]

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை இராமலிங்கம்

கணபதிப்பிள்ளை இராமலிங்கம் காலமாகிவிட்டார். இவர் சுந்தரத்தின் சகோதரனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், பூமணி, பரமேஸ்வரி, பாலசிங்கம் (தொலைத் தொடர்பு திணைக்களம்), புவனேஸ்வரி, லோகநாதன் (நீதிமன்றம், மல்லாகம்), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், வீரசிங்கம் செல்வநாயகம், சிறிஸ்கந்தராஜா, புஸ்பராஜா (அருள்), இந்திராதேவி, கௌரிதேவி, ஆகியோரின் மாமனாரும், சிவரெத்தினம், நாகரத்தினம், ருக்மணி, சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (10-01 1993) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரது இல்லில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
க. சிவரெத்தினம்
(மைத்துனர்)

ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (24015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org